1979 மார்ச் 17]

பட்ட மேற்படிப்புகளில் தமிழ் போதனா மொழி.

* **வினா எண் : 445—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்பொழுது எந்தெந்த பட்ட மேற்படிப்புகளில் தமிழ் போதனா மொழியாக அமுல்படுத்தப்படுகிறது?

(ஆ) மேற்கொண்டு எந்தெந்த பட்ட மேற்படிப்புகளில் தமிழை போதனா மொழியாகக் கொண்டு வர அரசு உத்தேசித் துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மதுரை, தியாலாஜ்கல் செமினரியில் தத்துவம் மற்றும் மதம் போன்ற பாடங்களிலும், சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாற்றுத் துறையில் வரலாற்றுப் பிரிவிலும் தமிழ் போதனா மொழியாக அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1979-80-ம் ஆண்டிலிருந்து கல்லூரிகளில் வரலாறு பட்ட மேற்படிப்பு வகுப்பில் தமிழை போதனா மொழியாக கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக்கல்வி தமிழிலே இருப்பதற்கு அரசு வகை செய்திருக்கிறது. ஆனால் தமிழில் படிப்பதற்கு நல்லபோதிய புத்தகங்கள் கிடைக்க வில்லை. தமிழ்ப் புத்தகங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது இந்தக் குறையைப் போக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதற்கான நட வடிக்கையை அரசு எடுக்கும்.

டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை.

* **வினா எண் : 446—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 18—7—1978 தேதி T. I. சைக்கிள் பாக்டரியை திறக்கும்படி கோரி சென்னை-செங்கை மாவட்டங்களில் ஒருதினம் எல்லா தொழிலாளர்களும் பொது வேலை நிறுத்தம் செய்ததை அரசு அறியுமா?